செ.வெ.எண.09 நாள் : 04.04.2020

# பத்திரிக்கைச் செய்தி

கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்காக நாடு முழுவதும் 144ன்கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இத்தடை உத்தரவின் போது உதவிகள் தேவைபடும் மாற்றுத்திறனாளகள் முதியோர்/உடல்நலம் குன்றியோர் ஆகியோர் தொடர்பு கொள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் வழி காட்டுதலின் படி மாநில மற்றும் மாவட்ட அளவிலான தொடர்பு எண்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாற்றதிறனாளிகள் மற்றும் முதியோர்களுக்கான அனைத்து தேவைகளுக்கு பிரத்யேக 24x7 உதவி எண் 18004250111 பேச்சு திறன் மற்றும் செவித்திறன் குறையுடைய மாற்றுதிறனாளிக்கான எண் 9700799993 சைகை மொழி பெயர்பாளர் உதவியுடன் விடியோ காலிங் வசதி கொண்டது இத்தொடர்பு எண்களில் பெறப்படும் கோரிக்கைகள் குறித்தான மாவட்ட அலுவலர்கள் உள்ளடக்கிய மாநில அளவில் What App குழு செயல்பட்டு வருகிறது.இக்குழுவின் மூலம் பெறப்படும் கோரிக்கைகள் மாவட்ட ஆட்சியரின் அவர்களின் அறிவரையின் பேரில் நிறைவேற்றப்படும்.

முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்ட பணியாளர்கள் 108 மற்றும் 104 உடன் இணைந்து மருத்துவமனைக்கு செல்ல இயலாத நோயாளிகான டயாலசிஸ் போன்ற மருத்துவ அவசர தேவைகளுக்கான எண் 044-29510400 மற்றும் 9444340496 வழங்கப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தை சார்ந்த மாற்றுதிறனாளிகள் முதியோர் ஆதரவற்றோர் போன்றோர் கொரோனா ஊரடங்கு சமயத்தில் தங்களுக்கு தேவைப்படும் உணவு,தங்குமிடம்,மருத்துவ வசதி போன்ற உதவிகளுக்கு அரியலூர் மாவட்ட ஆட்சியரக கட்டுபாட்டு எண் 1077 மற்றும் 0432228709 மற்றும் மாவட்ட குழு ஒருங்கிணைப்பாளர் குழுவின் எண்9444497170, 7338801252, 7402607734 ஆகிய எண்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சிதலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.**, அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**